மாலை மலர் சென்னை 13-6-2017 ★★★



அகில இந்திய பால்பேட்மின்டன்

# ஐ.சி.எப். சாம்பியன்

செயின்ட் ஜோசப் கல்வி நிறுவனங்கள் சார்பில் 9-வது அகில இந்திய அழைப்பு பால்பேட்மின்டன் போட்டி சென்னையில் நடந்தது.

சோழிங்கநல்லூரில் உள்ள அந்த கல்லூரி வளாகத்தில் 3 நாட்கள் நடந்த இந்த போட்டியில் 16 அணிகள் பங்கேற்றன. இதில் ஐ.சி.எப் அணி சாம்பியன் பட்டம் வென்றது. அந்த அணி கடைசி ‘லீக்’ ஆட்டத்தில் மேற்கு ரெயில்வேயை 30-35, 35-32, 35-23 என்ற கணக்கில் தோற்கடித்தது.

2-வது இடத்தை மேற்கு ரெயில்வேயும், 3-வது இடத்தை தெற்கு ரெயில்வேயும், 4-வது இடத்தை செயின்ட் ஜோசப் கல்லூரியும் பிடித்தன. சாம்பியன் பட்டம் வென்ற ஐ.சி.எப்.புக்கு ரூ.50 ஆயிரம் பரிசாக வழங்கப்பட்டது. 2-வது இடத்துக்கு ரூ.35 ஆயிரமும், 3-வது மற்றும் 4-வது இடத்துக்கு முறையே ரூ.25 ஆயிரம், ரூ.15 ஆயிரம் வழங்கப்பட்டன. பரிசளிப்பு விழாவில் சர்வதேச கூடைப்பந்து வீரர் அபிலேக்பால் பங்கேற்று பரிசுகளை வழங்கினார். விழாவில் ஜெயின்ட் ஜோசப்ஸ் கல்வி நிறுவனங்களின் சேர்மனும், நிர்வாக இயக்குனருமான பி.பாபு மனோகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

all 160617